# வருடாந்த அறிக்கை

# 2010



பசுமைப் பூங்கா நம்பிக்கை நிதியம்

தேசியப் பசுமைப் பூங்காத் திணைக்களம்

பேராதனை

# இலங்கையின் பசுமைப் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன் புரிச் செயல்களிற்கான பொறுப்பு நிதியம்

## வருடாந்த அறிக்கை - 2010 (Annual Report – 2010)

இலங்கையின் பசுமைப் பூங்காக்களை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் நலன் புரிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும், பொறுப்பு நிதியம் எனும் தலைப்பில் அன்றைய விவசாய காணி மற்றும் வன வளங்கள் அமைச்சரினால் 1995.12.15 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தைக் கவனத்திற் கொண்டு, 1996.02.07 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தின் போது பசுமைப் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரிச் செயல்களிற்கான பொறுப்பு நிதியத்தைத் தாபிப்பதற்காக அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

பசுமைப் பூங்காக்களிற்கான நுழைவுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தில் வருடாந்தம் 25 வீதத்தைப் பசுமைப் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரிச் செயல்களிற்கான பொறுப்பு நிதிய வருமானமாக ஒதுக்கப்படுவதுடன், இந்த நிதியத்தின் பிரதான வருமான மார்க்கத்தையும், அதற்கு மேலதிகமாக நிதியத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்குத் தகுந்த விடயங்களை மேற்கொள்வதற்கு இடவசதிகள் செய்யப்பட்டுள்ளது.

### பசுமைப் பூங்கா பொறுப்பு நிதியம்

1. நிதியத்தின் பெயர் : இலங்கையின் பசுமைப் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரிச் செயல்களிற்கான பொறுப்பு நிதியம்
2. தன்மை : பசுமைப் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டெலும் நடவடிக்கைகளிற்குப் பண உதவி பெற்றுக் கொடுத்தல்.'
3. உரிய சுற்றறிக்கைகள்: (I) நிதியத்தை ஆரம்பித்தல் - 1917 இலக்கம் 09 கொண்ட நிதியக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க

   (II) கணக்கு வைத்தல் மற்றும் கணக்கு அறிக்கைகள் முன்வைத்தல் திறைசேரி சுற்றறிக்கை 1977ஆகஸ்ட் 16 அம் திகதி இலக்கம் 836 கொண்ட சுற்றறிக்கை
4. ஆரம்பிக்கப்பட்ட திகதி : 1996 டிசம்பர் 20)
5. அலவலகம் : பேராதனை தேசியப் பசுமைப் பூங்காத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம்
6. வங்கி : பேராதனை இலங்கை வங்கி கணக்க இலக்கம் 7040848

7. நிதியத்தின் நோக்கங்கள்

அ. இலங்கை மற்றும் வெளிநாடுகளிற்குள் பசுமைப் பூங்கா தொடர்பாக நிலவும் பிரதிரூபத்தை மேலும் சீராக்குவதற்க நடவடிக்கை எடுத்தல்

ஆ. சூழல் கல்வியும் மூலிகை தொடர்பாக தற்பொழுது நிலவும் பாதுகாப்பு தொடர்பாக அர்த்தமுள்ள வேலைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி பரவலாக்கல்

இ. பசுமைப் பூங்காக்களின் சேவையில் ஈடுபடும் விஞ்ஞானிகளின் விஞ்ஞான அறிவு செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்தல் போன்றவற்றிற்குறிய நடவடிக்கைகளிற்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்

ஈ. மூலிகையின் மொத்தம் தொடர்பான வளர்ச்சி வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கல்

உ. பசுமைப் பூங்காக்களின் பிரயோசனத்திற்காக சூழல் கல்விப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக தொழில் நுட்பத் துறைகளின் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் அதற்கு உதவியழித்தல்

ஊ. விஞ்ஞானிகளிற்கு மற்றும் பசுமைப் பூங்காவிற்கு வருகை தருபவர்களிற்குத் தேவையான வசதிகளை வழங்கவதற்குத் தேவையான எவ்வாறான அவசர நிர்மாண நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளல்

எ. விஷேட வேலைத்திட்டம் ஒன்றின் போது மீண்டெலும் நிதியத்தின் குறைபாட்டை நிவர்த்தி செய்து கொள்ளல்

**நிதியத்தின் நிதி முன்னேற்றம்**

| | | |
|---|---|---|
| 2010-01-01 ஆம் திகதி பற்று நிலுவை | } | ரூ. 47,422,130.00 |
| சேர்க்கப்பட்டுள்ளது | | |
| 2010 ஆம் ஆண்டின் வருமானம் ^பற்று வைத்தல்& | } | ரூ. 41,263,919.00 |
| | | ----------------- |
| | | ரூ. 88,686,049.00 |
| குறைக்கப்பட்டது | | |
| 2010 ஆம் ஆண்டின் செலவு ^வரவு வைத்தல்& | } | ரூ. 40,156,400.00 |
| | | ----------------- |
| 2010-12-31 திறைசேரி நிலுவை | } | ரூ. 48,529,649.00 |
| | | =========== |

## நிதியத்தின் நிதியைப் பயன்படுத்தி 2010 ஆம் ஆண்டிற்குள் செயற்படுத்தப்பட்டுள்ள விஷேட அபிவிருத்திச் செயற்பாடுகள்

- பசுமைப் பூங்கா அலங்காரச் செலவின் கீழ் பூங்காவைப் பராமரிப்பதற்காகத் தொழிலாளர்களின் உழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு மீண்டெலும் நிதி

போதாமையினால் நிதியத்தில் இருந்து 4.2 மில்லியன் ரூபா செலவு செய்ய நேரிட்டுள்ளது '





- பசுமைப் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்துவதின் கீழ் சேவையில் ஈடுபடும் பலதரப்பட்ட மட்டத்திலான பதவியில் உள்ள சேவகர்களிற்குப் பயிற்சியழித்தல், சீருடை பெற்றுக் கொடுத்தல், பூக்கன்றுகளின் விதைகள் மற்றும் கன்றுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

- பேராதனைப் பசுமைப் பூங்கா அபிவிருத்தியின் கீழ் உள்ளகப் பாதைகள் 1.8 கிலோ மீற்றர் துாரத்தை மத்திய மாகாண பாதைகள் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாகச் செயற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக நிதியத்தில் இருந்து ரூ:15,006,965.00 செலவு செய்யப்பட்டுள்ளது.





- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றாடல் பயணிகளின் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நவீன உதிரிப்பாகங்களுடன் கூடிய மலசலகூடத் தொகுதிகள் 04 ஐ நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்ப விடயங்கள் தொடர்பாக மத்திய ஆலோசனைப் பணியகத்தின் மூலம் மேற்கொள்ளும் இந்த விடயங்களிற்காக நிதியத்தில் இருந்து ரூ:4,544,809.00 செலவு செய்யப்பட்டுள்ளது.

- ஹக்கள பசுமைப் பூங்கா அபிவிருத்தியின் கீழ் தற்பொழுதுள்ள கன்று வீடுகளிற்கு மேலதிகமாக சிறந்த தரமுடைய மூன்று கன்று வீடுகளை ஹேலீஸ் நிறுவனம் ஊடாக நிர்மாணித்துக்கொள்ளப்படுவதுடன், அதற்காக இந்த வருடத்திற்குள் நிதியத்தில் இருந்து செலவு செய்யப்பட்டுள்ள தொகை 680,725.00 ரூபாவாகும்



- ஹக்கள பசுமைப் பூங்காவிற்குள் தாபிக்கப்பட்டுள்ள சுற்றாடல் பங்களா, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றாடல் பயணிகளின் உல்லாச வசதிகளை அதிகரித்துக் கொள்ளும் விதம் ரூ:137,727,000.00 செலவில் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது.



- கம்பஹ பசுமைப் பூங்கா அபிவிருத்தியின் கீழ் மூலிகை வீடொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- அவிஸ்ஸாவெல்ல பசுமைப் பூங்காவில் 2008 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அலுவலகக் கட்டிடத்திற்கான முலதனச் செலவு போதாமை காரணமாக நிதியத்தில் இருந்து 2.3 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

- தேசிய மூலிகைக் கூடத்தின் பசுமை விஞ்ஞான ஆய்வு நடவடிக்கைகளிற்காக 1.1 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது





**நிதியத்தின் கிழ் 2010 ஆம் ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்டுள்ள விஷேட அபிவிருத்தி விடயங்கள் தொடர்பான சாராம்சம்**

| விடயங்கள் | செலவு |
|---|---|
| 1. பசுமைப் பூங்கா வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பூங்காவின் அலங்கார நடவடிக்கைகள் | ரூ. 6,483,485.00 |
| 2. பேராதனை ராஜகீய பசுமைப் பூங்காவிற்குள் பாதை அபிவிருத்தி புதிய மலசலகூடத் தொகுதி 04 ஐ நிர்மாணித்தல் | ரூ. 23,610,229.00 |
| 3. ஹக்கள பசுமைப் பூங்காவிற்குள் புதிய பொலித்தீன் வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் சுற்றாடல் பங்களாவை நவீனமயப்படுத்தல் | ரூ. 1,565,770.00 |
| 4. கம்பஹ பசுமைப் பூங்காவிற்குள் பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மூலிகை வீட்டை நிர்மாணித்தல் | ரூ. 500,000.00 |
| 5. அவிஸ்ஸாவெல்ல பசுமைப் பூங்கா அலுவலகக் கட்டிடம் மற்றும் ஏனைய அபிவிருத்திகள் | ரூ. 2,312,554.00 |
| 6. தேசிய மூலிகைக் கூட மூலிகைப் பகுப்பாய்வு மற்றும் மூலிகை இலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் | ரூ. 1,132,898.00 |

திரு: பீ.பீ.ஜயசுந்தர அவர்கள்
தலைவர் பசுமைப் பூங்கா பொறுப்பு நிதியம் மற்றும்
செயளாளர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

கலாநிதி ஈ.எஸ்.ஏ. விஜேசுந்தர
செயளாளர் பசுமைப் பூங்கா பொறுப்பு
நிதியம் மற்றும் பணிப்பாளர் நாயகம்
பசுமைப் பூங்காத் திணைக்களம்